**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.

திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் மாசித் திங்கள் 26ம் நாள்

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் நாள் செவ்வாய்க்கிழமை

*******

**அசல் வழக்கு எண். 86/2022**

**CNR.No.TNMY-07000140-2022**

கிரிஸ்டோபர் பொன்னன் சார்பாக
அவரது அதிகாரம் பெற்ற முகவர்
மூர்த்தி ...வாதி

**....எதிர்...**

1. Holy Redeemer's Finance Corporation
   சார்பாக இருதயராஜ்
2. சார்பதிவாளர்,
   சீர்காழி ...பிரதிவாதிகள்

(Plaint amended as per order in
IA.5/2024, dated: 01.03.2024)

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 24.02.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. M. சுதா அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதிக்கு எதிராக நாளிதழ் விளம்பரம் செய்யப்பட்டு, கடந்த 23.03.2023 அன்று திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால், 1ம் பிரதிவாதி தோன்றா தரப்பினராக்கப்பட்டு, அவருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், 2ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. S. முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை, ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.10 17:59:31 +0530

## தீர்ப்புரை

வழக்கு சொத்தை பொறுத்து வாதி 23.11.1990 தேதியில் ஆவண எண்: 1142/1990 ஆகிய அடமான ஆவணத்தின்படி பெற்ற கடனை வாதி செலுத்திவிட்டதால் மேற்படி கடன்கள் உளவடைந்துவிட்டது என்ற விளம்புகை பரிகாரம் கோரியும், மேற்படி கடன்கள் உளவடைந்து விட்டதற்கான Discharge Receipt, 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி அலுவலகத்தின் மூலம் எழுதிக்கொடுக்க வேண்டும் என்ற செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **வாதி வழக்குரையின் சுருக்கம்**

**(1.1)** வழக்கு சொத்து சீர்காழி தாலுக்கா, அகர எலத்தூர் கிராமத்தில் அமைந்துள்ளது என்றும், வழக்கு சொத்தை கடந்த 03.04.1978ல் வாதி தம்புசாமி பிள்ளை குமாரர் நாகரத்தினம் பிள்ளை அவர்கள் வகையறாவிடம் இருந்து கிரயம் வாங்கி வசத்தில் வைத்து அனுபவித்து வந்ததாகவும்,

**(1.2)** வாதியின் குடும்ப செலவிற்காக 1ம் பிரதிவாதியிடம் கடந்த 23.11.1990ம் தேதியில் ரூபாய் 10,000/-த்திற்கு நூறு ருபாய்க்கு ஒரு பைசா வீதம் வட்டி தருவதாக ஒப்புக்கொண்டு அடமான கடன் பத்திரம் எழுதி 2ம் பிரதிவாதி அலுவலகத்தில் 1142/1990 ஆவணமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், வாதி 1ம் பிரதிவாதியிடம் கடந்த 07.03.2002 அன்று வாங்கிய கடன்களை அடைத்ததற்கான வரவு ரசீதுக்குண்டான பதிவு செய்யப்படாத ஆவணத்தினை சாட்சிகள் முன்னிலையில் எழுதிகொடுத்ததாகவும்,

**(1.3)** 2ம் பிரதிவாதி அலுவலகத்தில் அடமான பத்திரத்தின் படி உளவடைந்து தருமாறு பலமுறை கேட்டதற்கு 1 பிரதிவாதி வீண் காலம் கடத்தி வருவதாகவும், இதனால் வாதியால் தாவா சொத்துக்களை பொறுத்து கிரயம், போக்கியம் எதுவும் செய்ய முடியாமல் மிகவும் சிரமத்தில் இருந்து வருவதாகவும், வாதிக்காக அடமானம் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்கள்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.10 17:59:37 +0530

காலாவாதியாகிவிட்டது என்றும்,

**(1.4)** எனவே தாவா சொத்தின் பேரில் உள்ள அடமான கடனை செலுத்திவிட்டதால் மேற்படி கடன் உளவடைந்துவிட்டது என விளம்புகை பரிகாரம் கோரியும், அதையொட்டி கடன் உளவடைந்துவிட்டதற்கான விடுவிப்பு ரசீது 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி அலுவலகத்தின் மூலம் எழுதிக்கொடுக்க வேண்டும் என செயலுறுத்து கட்டளை பரிகாரம் கோரியும், வாதியால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. 2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்.</u>**

**(2.1)** பதிவு பெற்ற ஆவண எண்:1142/1990-ன் கீழ் கடன் பெற்று, அசல் மற்றும் வட்டி தொகைகளை கொடுத்துவிட்டதாக குறிப்பிடும் வாதி, வழக்கு தாக்கல் செய்வதற்கு 1ம் பிரதிவாதிக்கு எவ்வித சட்டப்படியான அறிவிப்பும் கொடுத்ததாக குறிப்பிட்டு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும், 07.03.2022 அன்று பதிவு பெறாத வரவு ரசீது எழுதி கொடுத்ததாக குறிப்பிடும் வாதி அதனை ஏன் பதிவு செய்து கொள்ளவில்லை என்றும்,

**(2.2)** கிட்டதிட்ட 20 வருடம் கழித்து இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு எவ்வித விளக்கமும் குறிப்பிடப்படவில்லை என்றும், முறைப்படி செய்யப்பட்ட ஆவணங்களை 2ம் பிரதிவாதியானவர் ரத்து செய்ய எவ்வித முகாந்திரமும் இல்லை என்றும், மேலதிகாரி மற்றும் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் நீதிமன்ற உத்தரவு இருந்தால் தான் ரத்து செய்ய முடியும் என்றும்,

**(2.3)** 07.03.2022 ஆவணம் குறித்து எவ்வித மனுக்களும் 2ம் பிரதிவாதிக்கு கொடுக்காமல் மேற்படியாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது சட்டப்படி தவறு என்றும், 2ம் பிரதிவாதி அரசு அதிகாரி என்பதால் அவருக்கு கொடுக்கவேண்டிய 80CPC-யின் கீழான அறிவிப்பு வாதியால் கொடுக்கப்படாததற்கு, எந்த விளக்கமும் வாதியால் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எனவே, இவ்வழக்கினை அதிகபட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.10 17:59:43 +0530

செய்ய வேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. இவ்வழக்கின் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் தீர்வுக்காக வனையப்பட்டுள்ளன.**

1. வாதி தாவாவில் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ?
2. வாதி தாவாவில் கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ?
3. தரப்பினர்களுக்கு வேறு என்ன பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது?

4. வாதி தரப்பில் அவரது அதிகார முகவர் திரு. மூர்த்தி என்பவர் **வா.சா.1** ஆகவும், திரு. கணேஷ் என்பவர் **வா.சா.2** ஆகவும் சாட்சியம் அளித்துள்ளனர். வாதி தரப்பில் **வா.சா.ஆ.1** முதல் **வா.சா.ஆ.4** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 1ம் பிரதிவாதி தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளதால், சாட்சிகள் சான்றாவணங்கள் இல்லை. 2ம் பிரதிவாதி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் ஏதும் இல்லை.

**5.** வாதி தரப்பில் இவ்வழக்கினை அனுசரித்து திரு. மூர்த்தி **வா.சா.1** ஆக சாட்சியம் அளித்துள்ள நிலையில், அவர் மூலமாக கடந்த 03.04.1978 தேதியிட்ட கிறிஸ்டோபர் பொன்னன் பெயரில் ஏற்பட்ட சுத்த கிரய சாசனம் அசல் **வா.சா.ஆ.1** ஆகவும், 23.11.1990 தேதியிட்ட கிறிஸ்டோபர் பொன்னன் எழுதிக்கொடுத்த பெந்தக அடமான பத்திரம் அசல் **வா.சா.ஆ.2** ஆகவும், 21.11.1990 தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்த வில்லங்க சான்று அசல் **வா.சா.ஆ.3** ஆகவும் 07.03.2002 தேதியிட்ட வரவு ரசீது அசல் **வா.சா.ஆ.4** ஆகவும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**6. வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்** தாவா சொத்து வாதியின் முதல்வரான கிறிஸ்டோபர் பொன்னனுக்கு சொந்தமான சொத்து என்றும், அவர் கடந்த 03.04.1978ம் வருடம் தாவா சொத்தை நாகரத்தினம்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.10 17:59:49 +0530

பிள்ளை வகையறாவிடமிருந்து கிரயம் பெற்று அனுபவித்து வந்ததாகவும், இந்நிலையில் அவரது குடும்ப செலவிற்காக 1ம் பிரதிவாதி அலுவலகத்தில் தாவா சொத்தை பொறுத்து கடந்த 23.11.1990ல் பெந்தக அடமானம் பத்திரம் ஏற்படுத்தி ரூ. 10,000/- கடனாக மாதம் வட்டியாக ரூ.100க்கு 1.00 என்ற வீதத்தில் பெற்றுக்கொண்டு, மேற்படி கடனை பல தவனைகளில் அடைத்துவிட்டதாகவும், இறுதியாக கடந்த 07.03.2002ல் மேற்படி கடன்கள் உளவடைந்துவிட்டது என்பதற்காக 1ம் பிரதிவாதி தரப்பில் வரவு ரசீது எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும்,

**(6.1)** மேற்கண்ட ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி கடன் உளவடைந்துவிட்டது என்பதை பொறுத்து 2ம் பிரதிவாதி அலுவலகத்தில் விடுவிப்பு ரசீது எழுதிக்கொடுக்க பலமுறை கோரியும், 1ம் பிரதிவாதி தரப்பில் முன்வராத காரணத்தால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வாதி தனது வழக்கை சாட்சிய சான்றாவணங்கள் மூலமாக நிரூபணம் செய்துள்ளதால் வாதி கோரியவாறு தீர்ப்பாணை செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டது.

**(6.2) 2ம் பிரதிவாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்** அசல் மற்றும் வட்டித்தொகைகளை கொடுத்துவிட்டதாக கூறும் வாதி அதற்கு ஆதாரமாக எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றும், அப்படியே வரவு ரசீது எழுதிக்கொடுத்திருந்தாலும் கூட, அது பதிவு செய்யப்படவில்லை என்றும், முறைப்படி பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை ரத்து செய்ய 2ம் பிரதிவாதிக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்பதால் வாதி தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

**7. வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மற்றும் 2ம் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் கேட்கப்பட்டது.**

**8.** இவ்வழக்கில் வாதி மற்றும் 2ம் பிரதிவாதி தரப்பு வாதுரை, வழக்கு



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.10 17:59:55 +0530

ஆவணங்கள் மற்றும் சாட்சிகளை பரிசீலனை செய்து இவ்வழக்கில் வனையப்பட்ட எழுவினாக்களுக்கு இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு தீர்வு காண்கிறது.

**<u>தீர்வு</u>**

**<u>9. எழுவினா –1</u>**

**வாதி தாவாவில் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ?**

**(9.1)** வாதியின் அதிகார முதல்வர் கிறிஸ்டோபர் பொன்னன் தாவா சொத்தை கடந்த 03.04.1978ம் தேதியில் அகர எலத்தூரை சேர்ந்த நாகரத்தினம் பிள்ளை வகையறாவிடமிருந்து சரியான பிரதி பிரயோஜனத்தின் அடிப்படையில் கிரயம் பெற்றுள்ளார். அந்த ஆவணம் சீர்காழி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 557/1978 ஆக பதிவாகியுள்ளது. அதன் அசல் தாக்கல் செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**(9.2)** தாவா சொத்தில் கடந்த 01.01.1978 முதல் 20.11.1990 வரை ஆவண எண். 557/1978 வில்லங்கத்தை தவிர வேறு எதுவும் இல்லை என்பதற்காக தாவா சொத்தின் பேரிலான வில்லங்க சான்றின் அசல் தாக்கல் செய்யப்பட்டு, வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**(9.3)** தாவா சொத்தை பொறுத்து வாதியின் அதிகார முதல்வர் கிறிஸ்டோபர் பொன்னன் கடந்த 23.11.1990ல் 1ம் பிரதிவாதி அலுவலகத்தில் பெந்தக கடன் பெற்று, அதற்கான பெந்தக அடமான பத்திரம் சீர்காழி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1142/1990 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணம் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**(9.4)** மேற்கண்ட பெந்தக கடனை 1ம் பிரதிவாதி அலுவலகத்தில் வாதி அசல் மற்றும் வட்டி எதுவும் நிலுவையில் இல்லாமல் செலுத்திவிட்டதால் 1ம்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.10 18:00:00 +0530

பிரதிவாதி தரப்பில் தாவா சொத்தை பொறுத்து, வர வேண்டிய நிலுவைத்தொகை எதுவும் கிடையாது என வரவு ரசீது எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. அந்த ஆவணம் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட சாட்சிய சான்றாவணங்களை மறுத்து கட்சி எடுக்க வேண்டிய 1ம் பிரதிவாதி முறையாக அழைப்பாணை அனுப்பியும், சார்வு ஆகாததால் செய்தித்தாளில் விளம்பரம் செய்யப்பட்டு, கடந்த 23.03.2023ல் ஒருதலைப்பட்சம் ஆக்கப்பட்டுள்ளார். எனவே, 1ம் பிரதிவாதி தரப்பில் வாதியின் கட்சியை மறுக்கக்கூடிய அளவில் எவ்வித சாட்சிய சான்றாவணங்களும் இல்லை.

**(9.5)** 2ம் பிரதிவாதி தரப்பில் கடந்த 23.11.1990 தேதிய பெந்தக கடன் பத்திரத்தை பொறுத்து, பணம் செலுத்தியதற்கான எவ்வித ரசீதுகளும் தாக்கல் செய்யவில்லை என்று கட்சி எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் 1ம் பிரதிவாதி அலுவலகத்தில் மேற்கண்ட கடன் தீர்ந்துவிட்டது என்பதற்கு ஆதாரமாக வரவு ரசீது (வா.சா.ஆ.4) எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், வரவு ரசீதான வா.சா.ஆ.4 ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்றும் கட்சி எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் வரவு ரசீது பதிவு செய்யப்படவேண்டும் என்று சட்டரீதியில் எந்த அவசியமும் இல்லை என்பதால் மேற்கண்ட 2ம் பிரதிவாதியின் வாதமானது நிராகரிக்கப்படுகிறது.

மேலும், முறைப்படி பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை 2ம் பிரதிவாதி ரத்து செய்ய எவ்வித முகாந்திரமும் இல்லை என் கூறப்பட்டாலும் நீதிமன்ற உத்தரவு இருந்தால் ரத்து செய்ய முடியும் என ஒப்புக்கொள்ளப்பட்டு, 2ம் பிரதிவாதி தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**(9.6)** மேற்கண்ட சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, 1ம் பிரதிவாதி அலுவலகத்தில் பெறப்பட்ட அடமான ஆவண எண்.1142/1990ன் படியான கடனை வாதி வட்டி பாக்கி இல்லாமல் செலுத்திவிட்டார் என்பது நிரூபணமாகிறது.



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.10 18:00:06 +0530

எனவே, வாதி கோரிய கடந்த 23.11.1990 தேதியிட்ட ஆவண எண்.1142/1990 அடமான ஆவணத்தின் கடனை வாதி செலுத்திவிட்டதால், மேற்படி கடன் உளவடைந்துவிட்டது என்ற பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று எழுவினா–1 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

**<u>10.எழுவினா–2</u>**

**வாதி தாவாவில் கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ?**

23.11.1990 தேதியிட்ட ஆவண எண்.1142/1990 அடமான ஆவணத்தின் கடனை வாதி செலுத்திவிட்டதால், மேற்படி கடன் உளவடைந்துவிட்டது என்று எழுவினா எண் 1 வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், அதன் தொடர்ச்சியாக கடன் உளவடைந்துவிட்டதற்கான விடுவிப்பு ரசீது (Discharge receipt) 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி அலுவலகத்தின் மூலம் எழுதிக்கொடுக்க வேண்டும் என செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று எழுவினா–2 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

**<u>11. எழுவினா–3</u>**

**தரப்பினர்களுக்கு வேறு என்ன பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது?**

எழுவினா–1, எழுவினா–2 வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில் தரப்பினர்களுக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரங்கள் எதுவும் இல்லை என எழுவினா–3 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

**முடிவில்,** இவ்வழக்கானது அனுமதிக்கப்பட்டு, வழக்கு சொத்தை பொறுத்து, கடந்த 23.11.1990 தேதியில் ஆவண எண்.1142/1990ல் அடமான ஆவணத்தின்படி பெற்ற கடன் உளவடைந்துவிட்டது என விளம்புகை பரிகாரம் வாதிக்கு ஆதரவாக வழங்கியும்,

மேற்படி கடன் உளவடைந்துவிட்டதற்கான விடுவிப்பு ரசீது (Discharge



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.10 18:00:12 +0530

receipt) 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி அலுவலகத்தின் மூலம் எழுதிக்கொடுக்க வேண்டும் என செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு ஆதரவாக வழங்கியும் செலவுத்தொகையின்றி தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுத்து, பின்னர் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின்னர் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.10 18:00:18 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>பின் இணைப்பு</u>**
**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>**
வா.சா.1 திரு. மூர்த்தி (வாதியின் அதிகார முகவர்)
வா.சா.2 திரு. கணேஷ்
**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 03.04.1978 | கிறிஸ்டோபர் பொன்னன் பெயரில் ஏற்பட்ட சுத்த கிரய சாசனம் அசல் |
| வா.சா.ஆ.2 | 23.11.1990 | கிறிஸ்டோபர் பொன்னன் எழுதிக்கொடுத்த பெந்தக பத்திரம் அசல் |
| வா.சா.ஆ.3 | 21.11.1990 | தாவா சொத்தை பொறுத்த வில்லங்க சான்று அசல் |
| வா.சா.ஆ.4 | 07.03.2002 | வரவு ரசீது அசல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள்</u>** –இல்லை–

**பிரதிவாதி <u>தரப்பு சான்றாவணங்கள்</u>** –இல்லை–

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.10 18:00:24 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**சீர்காழி.**

**<u>நேரிய/வரைவு தீர்ப்புரை</u>**
அசல் வழக்கு எண் 86/2022
நாள்: 10.03.2026